**செய்தி வெளியீடு எண்: 376** **நாள்: 25.06.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் **24.6.2019** அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் கோயம்புத்தூர், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 7 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், நாமக்கல், மதுரை, தேனி மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 3 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் சிவகங்கை மாவட்டம், கஞ்சிரங்காலில் 1 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகவும், வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், தொழில்திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், பல்வேறு காரணங்களினால் உயர்கல்வியினைத் தொடர இயலாத மாணவ, மாணவிகள், தொழிற் பயிற்சி பெற்று அதன் மூலம் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (Industrial Training Institutes) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம்– ஆனைக்கட்டி, நாமக்கல் மாவட்டம் – கொல்லிமலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்– ஜமுனாமரத்தூர் ஆகிய இடங்களில் பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக துவக்கப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 7 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து தொழிற் பிரிவுகளுக்கான முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள்;

நாமக்கல் மற்றும் தேனி அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மின்பணியாளர் மற்றும் கட்டிடப்பட வரைவாளர் தொழிற்பிரிவுகளுக்கு 1 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சோலார் கருவிகள் பராமரிப்பு மற்றும் தையல் வேலை தொழில்நுட்பம் ஆகிய தொழிற்பிரிவுகளுக்கு 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; மதுரை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்;

சிவகங்கை மாவட்டம் – கஞ்சிரங்காலில் 1 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத்திற்கான தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகம்;

என மொத்தம் 13 கோடியே 1 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோஃபர் கபீல், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் ஆணையர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., தொழிலாளர் துறை ஆணையர் முனைவர் இரா. நந்தகோபால், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 25.6.2019**